# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2221 - 2021 මාර්තු මස 26 වැනි සිකුරාදා - 2021.03.26

*2221 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 677 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 676 | ஏல விற்பனைகள் | 680 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) செத்சர யோகா நிகேதனய கார்ய பாரய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தேருநர்களை பதிவு செய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


675 - B 82216 - 405 (2021/03)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -சம்மாந்துறை

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.03.27 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுதலுக்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர், அவற்றினை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டு அப்புறப்படுத்தல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏல விற்பனையின் போது கலந்து கொள்ளும் அனைவரும் COVID-19 தொற்று நோய் பரவலைத் தடுக்கும் வகையில் சுகாதார வழிமுறைகளைப் பேணிப் பின்பற்ற வேண்டும்.

எம். ஐ. எம். றிஸ்வி,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை,
2021.03.19.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பொது ஏல விற்பனைக்கான சான்றுப் பொருள் பட்டியல்

| தொ. இல. | வழக்கு இலக்கம் | பதிவு இலக்கம் | சான்றுப் பொருள் வகை | சான்றுப் பொருளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | 22822/ PC/ 19 | 202-3437 | முச்சக்கர வண்டி (உதிரிப்பாகங்கள்) | 01 |
| 02 | 22822/ PC/ 19 | 205-7301 | முச்சக்கர வண்டி (உதிரிப்பாகங்கள்) | 01 |
| 03 | 22822/ PC/ 19 | 206-7224 | முச்சக்கர வண்டி (உதிரிப்பாகங்கள்) | 01 |
| 04 | 22822/ PC/ 19 | 202-7761 | முச்சக்கர வண்டி (உதிரிப்பாகங்கள்) | 01 |
| 05 | 20502/ PC/ 18 | No any Number | சைக்கிள் | 01 |
| | | | மின்குமிழ் | 01 |
| | | | கத்தி | 01 |
| | | | அலவாங்கு | 01 |
| 06 | No Number | No any Number | சைக்கிள் | 01 |
| 07 | 25497/ MISC | No any Number | வாளி | 04 |
| | | | சவள் | 05 |
| 08 | 25623/ MISC | No any Number | வாளி | 01 |
| | | | சவள் | 01 |

3-782

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டி ன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் தருகின்றோம்.-

*கம்பனியின் முன்னைய பெயர்:* ரோசெல் செராமிக்ஸ் லிமிடெட்
*கம்பனி இலக்கம் :* பிபி 220
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:* இல. 20, ஆர் ஏ டி மெல் மாவத்தை, கொழும்பு - 03
*கம்பனியின் புதிய பெயர்:* பிஸ்கட் அன்ட் சாக்லெட் கம்பனி லிமிடெட்

*பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி :* 2021, பெப்புருவரி 22

பிஸ்கட் அன்ட் சாக்லேட் கம்பனி லிமிடெட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,
பி டபிள்யூ கோப்பறேட் செக்ரட்டேரியல் (பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2021, மாச்சு 01.

3-648

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டி ன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

*கம்பனியின் பெயர்:* கிராஃபியோ டூ ( பிறைவட்) லிமிடட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 116605
*கூட்டிணைப்புத் திகதி :* 2016, செத்தெம்பர் 21
*கம்பனியின் பதிவு முகவரி:* இல. 409, 3 ஆம் மாடி, காலி வீதி, கொழும்பு -03

கிராஃபியோ டூ ( பிறைவட்) லிமிடட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,
பி டபிள்யூ கோப்பறேட் செக்ரட்டேரியல் (பீவீடி) எல்டிடீ,
கம்பனிச் செயலாளர்கள்.

2021, மாச்சு 01.

3-661

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் நியதிகளின்படியான அறிவித்தல்

அக்ரிகல்ச்சரல் அன்ட் கிறீன் டெக்னோலொஜீஸ் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனிப் பதிவில. PV 115926

உறுப்பினர்களின் தன்னிச்சையான ஒடுக்குகை

உறுப்பினர்களின் தன்னிச்சையான ஒடுக்குகையாகக் கம்பெனியை ஒடுக்குவதற்கும், நுகேகொடை, கங்கொடவில, சுபத்ராராம வீதியிலுள்ள 83/1/2 ஆம் இலக்கதத்தைச் சேர்ந்த பட்டயம் பெற்ற கணக்காளர் திரு. நந்தன கபில பண்டார ரத்ணசிங்க அவர்கள் 2021, பெப்புருவரி 27 ஆந்திகதியிலிருந்து கம்பெனியின் ஒழிப்போனாக நியமிக்கப்படுவதற்கும் 2021, பெப்புருவரி 27 ஆந் திகதியன்று நுகேகொடை, கங்கொடவில, சுபத்ராராம வீதியிலுள்ள 83/1/2 ஆம் இலக்கத்தில் நடைபெற்ற கம்பெனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1) (ஆ) என்னும் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

என். கே. பி. ரத்ணசிங்க,
ஒழிப்போன்.

இல.83/1/2,
சுபத்ராராம வீதி,
கங்கொடவில, நுகேகொடை.

3-650

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் நியதிகளின்படியான அறிவித்தல்

அக்ரிகல்ச்சுரல் அன்ட் கிறீன் டெக்னோலொஜீஸ் (பிறைவேட்) லிமிடெட்
கம்பெனிப் பதிவில. PV 115926

ஒழிப்போனின் நியமனம் பற்றிய அறிவித்தல்

நுகேகொடை, கங்கொடவில, சுபத்ராராம வீதியிலுள்ள 83/1/2 ஆம் இலக்கதத்தைச் சேர்ந்த பட்டயம் பெற்ற கணக்காளர் திரு. நந்தன கபில பண்டார ரத்ணசிங்க ஆகிய நான், 2021, பெப்புருவரி 27 ஆந் திகதியிலிருந்து கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் அதனால் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானத்தின் மூலம் அக்ரிகல்ச்சுரல் அன்ட் கிறீன் டெக்னொலொஜீஸ் (பிறைவேட் ) லிமிடெட்டின் ஒழிப்போனாக

நியமிக்கப்பட்டுள்ளேன் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.

என். கே. பி. ரத்ணசிங்க,
ஒழிப்போன்.

இல.83/1/2,
சுபத்ராராம வீதி,
கங்கொடவில, நுகேகொடை.

3-651

---

## சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டடுடன் ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்டை ஒன்றிணைப்புச் செய்தல்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (குறித்த சட்டம்) 242 ஆம் (3) (b) ஆம் பிரிவின் பிரகாரம், இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம், சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டடுடன் (கம்பனி பதிவிலக்கம் பிவீ 784)

ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனியின் பதிவிலக்கம் பிவீ 89355) ஒன்றிணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டடின் முழுவதும் உரித்தான இணை நிறுவனமான ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டடின் பணிப்பாளர் சபை மற்றும் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டடின் பணிப்பாளர்கள் சபையானது, குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டடுடன் ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டடை, 2021, மாச்சு 26 ஆந் திகதி ஒன்றிணைப்பதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளதுடன் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டட் நிலைத்திருந்து ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டடின் இருப்பு முடிவுக்கு வரும்.

இந்த அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்திலிருந்து 20 நாட்களுக்குக் குறையாத தினமொன்றில், குறித்த சட்டத்தின் 243 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களுடன் கூடியதாக, உத்தேச ஒன்றிணைப்பின் பதிவு தொடர்பாக, கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டட் தொடர்பாக, குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனிகள் பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்பிற்கான சான்றிதழ் வழங்கப்படுவதன் மூலம், குறித்த ஒன்றிணைப்பானது செயல்வலுப் பெறும்.

குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (குறித்த கம்பனி) மற்றும் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டட் பணிப்பாளர் சபை மூலம் அங்கீகரிக்கப்படும் ஒன்றிணைப்பின் தீர்மானங்கள் அடங்கியுள்ளதாகக் கருதப்படும், ஒன்றிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை, கொழும்பு 7, கிறகரிஸ் வீதி, இல. 59 , இலிலுள்ள பி. ஆர். கோப்பரேட் சர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட், கம்பனிச் செயலாளரின் அலுவலகத்தில், சாதாரண வர்த்தக நேரங்களில் கம்பனியின் எந்தவொரு கடனாளி அல்லது பங்குதாரர் அல்லது கம்பனிக்குக் கடப்பாடுடைய எந்தவொரு நபராலும் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனிக்குச் கடப்பாடுடைய எந்தவொரு நபரும் கம்பனிக்குக் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒன்றிணைப்புப் பிரேரணையின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையோர் ஆவார்கள்.

ஏஷியன் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் சீட் கெலனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டட் பணிப்பாளர்களின் கட்டளைப் பிரகாரம்,

பி.ஆர். கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

2021, பெப்புருவரி 24.

3-598

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 145/5, சூரிய மாவத்தை, தலங்கம வடக்கு, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் முகவரியை வதிவிடமாகவும், தே.அ.அ.இல. 703412467V) கொண்ட பஸ்நாயக்க முதியன்சேலாக பிரியந்த ஜானக பண்டார மற்றும் தே.அ.அ. அட்டை இல. 806430820V கொண்ட பஸ்நாயக்க முதியன்சேலாகே நதீஷா அயோமி ஆகிய நாங்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளுக்கு அறியத் தருவதாவது.-

நாங்கள் எமது சட்டபூர்வ அற்றோணித் தத்துவ அனுமதிப்பத்திர உரிமையாளரான இலக்கம் 255E, விஹார மாவத்தை, இஹலயாகொட, இம்புல்கொடவை வதிவிடமாகவும், தே.அ.அ.இலக்கம் 475132769V கொண்ட ராஜபக்ஷகே மியுலின் ராஜபக்ஷ என்பவரை நியமித்து வழங்கப்பட்ட 649 மற்றும் 2008.02.07 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிசு சேபாலிகா நாணயக்கார அவர்களால் எழுதப்பட்டு சான்றுபடுத்தப்பட்ட எழுத்துமூல அதிகார அற்றோணித் தத்துவ அனுமதிப்பத்திர புத்தகத்தில் பகுதி 376 வில் இருமடி ஆவணத்தில் 157 ஆம் நாளேட்டுப் புத்தக இலக்கத்தின் கீழ் 2008.02.26 திகதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவ அனுமதிப்பத்திரம், இதனைத் தொடர்ந்து செல்லுபடியற்றதாகும் எனவும், மேலும் அதற்குரிய அதிகாரம் இல்லை எனவும் அறியத்தருகின்றோம்.

பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரியந்த
ஜானக பண்டார,

பஸ்நாயக்க முதியன்சேலாகே நதீஷா
அயோமி.

2021, பெப்புருவரி 24.

3-593

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 255E, விஹார மாவத்தை, இஹலயாகொடவை இம்புல் கொடவை வதிவிடமாகவும், தே.அ.அ.இலக்கம் 696161330V கொண்ட பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரியானி புஷ்பிகா பண்டார ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசைகளுக்கு அறியத்தருவதாவது.-

நான் எனது சட்டபூர்வ அற்றோணித் தத்துவப் பத்திர உரிமையாளராக இலக்கம் 255E, விஹார மாவத்தை, இஹலயாகொட, இம்புல்கொடவை வதிவிடமாகவும், தே.அ.அ.இல. 475132769V கொண்ட ராஜபக்ஷகே மியுலின் ராஜபக்ஷ என்பவரை நியமித்து வழங்கப்பட்ட 2686 மற்றும் 2019.10.13 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிசு சேபாலிகா நாணயக்கார அவர்களால் எழுதப்பட்டு சான்றுப்படுத்தப்பட்ட எழுத்து மூல அற்றோணித் தத்துவ அனுமதிப்பத்திரப் புத்தகத்தில் 87 பகுதி 86 இருமடி ஆவணத்தில் 4696 நாளேட்டுப் புத்தக இலக்கத்தின் கீழ் 2019.12.17 ஆந் திகதியில் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவ அனுமதிப்பத்திரம், இதனைத் தொடர்ந்து செல்லுபடியற்றதாகும் எனவும், மேலும் அதற்குரிய அதிகாரம் இல்லை எனவும் அறியத்தருகின்றோம்.

பஸ்நாயக்க முதியன்சேலாக பிரியானி
புஷ்பிகா பண்டார.

3-594

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

திம்பிரிகஸ்கடுவ, பஹல கந்தவல, இல. 279/ A எனும் முகவரியில் வதியும் ரணசிங்க ஆராச்சிகே தொன் துஷான் அனுஷ்க ஆகிய நான், உதானி குணவர்தனா, இரண்டாவது செயலாளர் , ஸ்ரீ லங்கா தூதரகம், டோக்கியோ, ஜப்பான் மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.04.13 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தினால் திம்பிரிகஸ்கடுவ, பஹல கந்தவல, இல. 279/ A யில் வதியும் முருத்தெட்டுவ, கம்லத்தலாகே லயன்க பிரியன்கனி குமாரி ஜயவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்படி அற்றோணித் தத்துவத்தின் மீது இனிமேல் எனது சார்பாக அவர் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக இருக்கப் போவதில்லையென அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரணசிங்க ஆராச்சிகே டொன் துஷான் அனுஷ்க.

3-601

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருநாகல், கவுடாவத்த, மீபுரசெவன என்ற இடத்தில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியான்சேலாகே துசித் குமார பண்டார ஏக்கநாயக்க ஆகிய நான், எனது அற்றோணி அதிகாரியாக கொழும்பு ஹுணுப்பிட்டிய, லேக் வீதி, இலக்கம் 121 இல் வசிக்கும் நீலகாந்தி ஏக்கநாயக்க குணவர்தன என்பவரை நியமித்து குருநாகல் பிரசித்தி பெற்ற நொத்தாரிசு நர்மதா மீவத்தன அவர்களினால் எழுதி சான்றுப் படுத்தப்பட்ட இலக்கம் 632 மற்றும் 2017.11.05 ஆந் திகதியைக் கொண்ட 2020, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி முதல் வகையில் அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்யப்பட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஏக்கநாயக்க முதியான்சேலாகே துசித்
பண்டார ஏக்கநாயக்க .

3-618

---

## வெளிநாட்டு அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹற்றன், 19-5/ B, மென்டிஸ் மாவத்தை, தற்போது இல.06, (பழைய இல. 21/ B), அகிலா லேன்ட்ஸ், மாம்பழச் சாலை, திருச்சி, இந்தியாவில் வசிக்கும் பிச்சை செந்தில் அரஸ் (தே.அ.அ.இல. 792484948 V) ஆகிய நான், திருச்சி, இந்தியா பிரசித்த நொத்தாரிசு G. ராஜா என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2019.06.17 ஆந் திகதியும், BV331234ஆம் இலக்கமும் கொண்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் இல. 60B, பண்டாரநாயக்க டவுன், ஹட்டனில் வதியும் சுப்பு சர்மிலா மற்றும் இல. 122A, ருவன்புர, ஹட்டனில் வதியும் லக்ஷ்மன் பரத் ஆகியோருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் 2021.02.03 ஆந் திகதி முதல் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் எனவும் இனிமேல் அவர்களது எந்தவொரு கொடுக்கல் வாங்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

பிச்சை செந்தில் அரஸ்.

3-756

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சீதுவ, மூகலன்கமுவ, இல. 374 எனும் முகவரியில் வசிக்கும் அசித் சமீர பெந்தொட்டகே (தே.அ.அ.இல. 197135802190) ஆகிய நான், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு நிலுஷி உயன்வத்த என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 211 மற்றும் 2017.12.19 ஆந் திகதிய விசேட அற்றோணித்தத்துவத்தினால், கும்புக்கெடே, ஹெட்டிகம, எனும் முகவரியில் வசிக்கும் பத்தேகமகெதர உபுல் சமிந்த விக்கிரமசிங்ஹ (தே.அ.அ.இல. 812942751V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக மற்றும் அற்றோணித்தத்துவகாரரான பத்தேகமகெதர உபுல் சமிந்த விக்கிரமசிங்ஹவினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

அசித் சமீர பெந்தொட்டகே.

3-619

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு 14, லூகஸ் வீதி, இல. 06 இடப்பட்ட இடத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அமைந்துள்ள ஐடியா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட் நிறுவனம் ( PB 5357) ஆகிய நாம் பாணந்துறை நொத்தாரிசு கே. திலினி என். பொன்சேகா அவர்களால் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட விசேடமான அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு 14, லூகஸ் வீதி, இல. 06 இடப்பட்ட இடம் மற்றும் கிரிபத்கொடை, வைத்தியசாலை வீதி, ரணசிங்க வத்தை, இல. 279-1 இல் வசிக்கும் சிந்தக நிரஞ்சன் பெட்றிக் என்ற பெயருடையவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இத்தால் நிரப்பிப் பெற்றுக் கொண்டு இரத்துச் செய்யப்படுகிறது என இலங்கைக் குடியரசின் சகல மக்களும், ஏனையோரும் தெரிவித்துக் கொள்ளக்கடவது, குறிப்பிடப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அற்றோணித் தத்துவக்காரரினால் இத்தினத்திற்குப் பின்னர் எங்கள் நிறுவனத்தின் பெயரால் செய்யப்பட்ட செயற்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தினால் எவ்விதப் பொறுப்புக்களும் கையேற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை சகலரும் அறியக் கடவது.

பணிப்பாளர் சபை - ஐடியா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட் நிறுவனம்.

3-774

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர். ஆர். கிரிஷான்
கணக்கு இல.0217 5000 4587

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.30ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.08.20ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே தொண்ணூற்றி ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தி ஒன்பது ரூபா ஐம்பத்தி எட்டு சதம் (ரூபா 1,91,50,249.58) 2019, மே 27 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எண்பத்தி ஒரு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா தொண்ணூற்றி இரண்டு சதம் (ரூபா 1,81,43,194.92) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 5233 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.06 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉட கோரலேயின் வேஉடவில்லி ஹத்பத்துவையின் மாவத்தகம பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பண்டாரகலவத்த, இல. 647, கிராம அலுவலர் பிரிவின் யட்டவில் கிராமத்தில் அமைந்த யட்டவில, கண்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 513 ஐ ஏற்ற "மினிப்பிட்டியவ த்த எனும் கொய்லங்கெ வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000,யூலை 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 634 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 6 (10 அடிகள் அகள வீதி); கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 625 எனும் வரைபடத்தின் லொட் 1 (வீதி) மற்றும் லொட் 2 (வீதி); தெற்கு : குருநாகல் முதல் கண்டி வரையான பிரதான வீதி மற்றும் மேற்கு: இங்கமைந்து லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 30.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 643 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 104/27 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எம். ரீ. பண்டா என்பவரால் தயாரிக்கப்பட்ட லொட் 1, 2 மற்றும் 3 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்.

3- 751

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஒட்டோவின் டிரேடிங் இன்டர்நெஷனல் ( பிரைவட்) லிமிட்டட்
கணக்கு இல.0194 1000 0272

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.02ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.07.22ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே தொண்ணூற்றி ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு ரூபா ஐந்து சதம் (ரூபா 4,91,24,668.05) 2021, மாச்சு 21 ஆந் திகதி முதல் கூறப்பட்ட ஈட்டு முறிகள் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே முப்பதி ஆறு இலட்சத்து எழுபதினாயிரத்து முன்னூற்றி இருபத்தி ஒன்பது ரூபா ஐம்பத்து ஒன்பது சதம் (ரூபா 3,36,70,329.59) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக இல. 84111 எனும் வரைபடத்தின் லொட் A 2021.05.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிட்டிகல் கோறளே யட்டிகலன் பத்துவ நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மாரவில 512 ஆம் இலக்கத்தைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவின் ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள "T.P. இல. 99188 X170 என்ற இலக்கத்தைக் கொண்ட மொரகவத்த" காணிக்கு எம். ஜே. கோமஸ் என்ற நிலஅளவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2006, நவெம்பர் 09 ஆந் திகதியிடப்பட்ட 8411 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு பிரிக்கப்பட்டு லொட் A என்ற அடையாளம் இடப்பட்டுள்ள காணியின் பகுதிக்கு எல்லைகள்– வடக்கு : எரிக்சூரியவேனவின் காணி ; கிழக்கு : சிலாபத்தில் இருந்து கொழும்பு வரையான பிரதான வீதி; தெற்கு : வீடுகளில் இருந்து பிரதான பாதை வரை பிரதேச சபை வீதி மற்றும் மேற்கு: இங்கு லொட் B என்ற எல்லைகளுக்குள் அமைந்துள்ள 25 பேர்ச் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட 8411 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்துக்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 207/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈட்டு பிணை முறி இல. 2307, 2564, 4025 மற்றும் 5089 ஊடாக மற்றும் அதன் கீழ் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3- 753

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டபிள்யூ. ஏ. சீ. தில்ருக்ஷி, ஏ. பீ. ஏ. எம். பெரேரா மற்றும் ஏ. பீ.கே. ஆர். பெரேரா.
கணக்கு இல.0108 5000 8057

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.09.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.11.01ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.10.23ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே இருபத்தொரு இலட்சத்து பதினாறாயிரத்து எழுபத்தி ஏழு ரூபா எண்பத்தி ஒன்பது சதம் (ரூபா 2,21,16,077.89) 2019, ஓகத்து 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு கோடியே பத்து இலட்சத்து அறுபத்தேழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்றி எட்டு ரூபா எண்பத்தி இரண்டு சதம் (ரூபா 2,10,67,398.82) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 375 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா

என்பவர்கள் மூலமாக 2021.05.17 ஆந் திகதி மு.ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே மெத பத்துவின் சீதாவக்க பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் சீதாவக்க (பாதுக்கை உப அலுவலகம்) பிரதேச செயலாளர் பிரிவின் கலகெதர கிழக்கு இல. 452 கிராம அலுவலர் பிரிவின் கலகெதர கிராமத்தில் அமைந்த "கல்கொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் ஆர். பீ. ஆர். எல். ராஜபக்ஷ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, பெப்புருவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 0001 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: டீ. பீ. ஏ. ஜயசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1975, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5861 எனும் வரைபடத்தின் லொட் 2 C; கிழக்கு: பிட்டி எலவை பிரிக்கும் பொல்கொரட்டுவனடிய ; தெற்கு: அரச காணி PWD வளவு, மற்றும் ; மேற்கு: வீதி (வீ. அ. அ. சபை), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி ஒன்பது தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ.1றூ.29.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 0001 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

மேற்கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

கூறப்பட்ட கலகெதர கிராமத்தில் அமைந்த "கல்கொடவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் டீ. பீ. ஏ. ஜயசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1975, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5861 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2D எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 2 C; கிழக்கு: பிட்டி எலவை பிரிக்கும் பொல்கொரட்டுவமன்டிய ; தெற்கு: அரச காணி PWD வளவு மற்றும் மேற்கு: வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி ஒன்பது தசம் ஐந்து சைபர் பேர்ச் (0ஏ.1றூ.29.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல.5861 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 185/42 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-754

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கமல் ப்வீசீ இன்டஸ்ரீஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.0018 1000 9256

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.12.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.02.26ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.02.15ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எட்டுக் கோடியே அறுபத்தாறு இலட்சத்து அறுபதினாயிரத்து நூற்று எழுபத்தி மூன்று ரூபாஅறுபத்தாறு சதம் (ரூபா 8,66,60,173.66) 2020, செத்தெம்பர் 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஆறு கோடியே தொண்ணூறு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து ஐந்நூற்று அறுபத்தியெட்டு ரூபா தொண்ணூற்றி நான்கு சதம் (ரூபா 6,90,48,568.94) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு இலக்கங்கள் MMB/ SB/ 018/ 2017/ 04, MMB/ SBL/ 018/ 2015/ 15 மற்றும் MMB/ SBL/ 018/ 2015/ 14 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.05 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இரத்மலானை, மாலிகாவ வீதி, இல. 58 ஐ ஏற்ற வளவுகளுக்குள் மற்றும் அதன் மீது வைக்கப்பட்ட அல்லது வேறு எந்தவொரு இடத்திற்கும் அல்லது இடங்களுக்கும் எடுத்துச் செல்லக் கூடிய மற்றும் அவ் இடத்தில் அல்லது அவ் இடங்களில் களஞ்சிப்படுத்தப்பட்ட அல்லது ஸ்தாபிக்கப்பட்ட இங்கு அதன் பிறகு எக்காலத்திலும் இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்ட அனைத்து மற்றும் ஒவ்வொரு அசையும் இயந்திர கூடங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்.

இறக்குமதி செய்யப்படவுள்ள புத்தம் புதிய Single Screw Extruder ஒவ்வொரு பகுதியும் மற்றும் வேறு அத்துடன் தொடர்புடைய உதிரிப்பாகங்கள்.

(இல.MMB/ SB/ 018/ 2017/ 04 எனும் இயந்திராதிகள் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இரத்மலானை, கந்தவல மாவத்தை, இல. 56 ஐ ஏற்ற வளவுகளுக்குள் மற்றும் அதன் மீது வைக்கப்பட்ட அல்லது வேறு எந்தவொரு இடத்திற்கும் அல்லது இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய மற்றும் அவ் இடத்தில் அல்லது இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய மற்றும் அவ் இடத்தில் அல்லது அவ் இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது ஸ்தாபிக்கப்பட்ட இங்கு அதன் பிறகு எக்காலத்திலும் இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்ட அனைத்து மற்றும் ஒவ்வொரு அசையும் இயந்திரகூடங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்.

1. KTS 170 PVC Pipw Extruder Gear Box ஒரு தொகுதி மற்றும் உதிரிப்பாகங்கள்.

(இல. MMB/ SBL/ 018/ 2015/ 15 எனும் இயந்திராதிகள் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

II. Elang Screw Air Compressor ஒரு தொகுதி மற்றும் இயந்திரத்திற்குரிய வேறு உபகரணங்கள்.

(இல. MMB/ SBL/ 018/ 2015/ 14 எனும் இயந்திராதிகள் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3- 752/1

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கமல் கேபல்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.0018 1000 9248

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.02.26ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.02.15ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு கோடியே அறுபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதினாயிரத்து இருநூற்று ஐம்பத்து இரண்டு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா 6,64,99,252.85) 2020, நவெம்பர் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐந்து கோடியே முப்பத்து மூன்று இலட்சம் ரூபா (ரூபா5,33,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினான்கு தசம் ஐந்து வீதம் (14.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு இலக்கங்கள் MMB/ SB/ 018/ 2017/ 05, எனும் இயந்திராதிகள் ஈட்டு முறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.05 ஆந் திகதி மு.ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கின்றது.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இரத்மலானை, கந்தவல மாவத்தை, இல. 56 ஐ ஏற்ற வளவுகளில் மற்றும் அதன் மீது வைக்கப்பட்டுள்ள அல்லது கொண்டு செல்லப்படும் மற்றும் களஞ்சியப்படுத்தி அல்லது ஸ்தாபிக்கப்பட்ட அல்லது வேறு இடத்திற்கோ அல்லது இடங்களின் மீது வைக்கப்பட்ட இங்கு நேர்த்தியாக விபரிக்கப்பட்ட அனைத்து மற்றும் ஒவ்வொரு அசையும் இயந்திரக் கூடங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்.

இயந்திராதிகள் தொடர்பான விபரங்கள்

One Unit of Complete Extrusion Line

மாதிரி- GM120 MM+ 45MM

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்.

3- 752/2

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் படி அசையும் ஆதனம்/இயந்திர உபகரணங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

ஹற்றன் நஷனல் பாங்க் பீஎல்சீ கொஹுவல கிளையில் (முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அழைக்கப்பட்டது)

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே.ஜி.என்.எஸ். சில்வா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயின் பெயருக்கு எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட இல. 1188 மற்றும் 2018.07.21ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டதும், இல. 1352 மற்றும் 2018.09.04 ஆந் திகதியிடப்பட்டதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிஸ் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 3600 மற்றும் 2018.02.22 ஆந் திகதியிடப்பட்டதுமான ஈட்டு முறியின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு, ஐகியா மார்கடிங் ( பிரைவட்) லிமிட்டெட் என்பவர் கடனாளியாக புறக்கணிக்கப்பட்டுள்ளதால், கீழே விபரிக்கப்பட்ட ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்ட காணியை அடகு வைத்துள்ளதோடு ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப அறவிடப்பட வேண்டிய கடன்தொகை சகலதும் செலுத்துதல் நிறுவப்பட்ட செலுத்துதல் மற்றும் ஏலவிற்பனையாளர் கட்டணம் உட்பட சகல தொகைகளையும் அறவிடுவதற்காக வேண்டி, கீழே குறிப்பிடப்படும் ஆதனம் 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அந்த ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க விற்பனை செய்யப்படும்.

### ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பத்துவ இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் தெஹிவளை- கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையினுள் கல்கிஸ்ஸை 541 கிராம அலுவலர் பிரிவு இல.18 வித்தியாலயத்தினுள் கல்கிஸ்ஸ த சேரம் வீதிக்குத் திரும்பி த அல்சிஸ் அவனியூ ஊடாக அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 07 என்ற கல்கிஸ்ஸ வத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் பாலசுப்ரமணியம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 322 மற்றும் 2006.11.18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் லொட் பி1 என்ற அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20.15பே.) விசாலமுடைய காணியோடும் மற்றும் அதனுள் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்தும் சகலதும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2021.02.19 ஆந் திகதியுடைய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், மற்றும் 2021.03.01 ஆந் திகதியுடைய "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகையிலும் பார்க்கவும்.

**காணிக்குப் பிரவேசிக்கும் விதம்**.-கொழும்பிலிருந்து கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டிய, வெள்ளவத்தை மற்றும் தெஹிவளையைத் தாண்டி காலி வீதியில் 1. கி.மீற்றர் முன்நோக்கி "எக்ஸ் டைல்ஸ்" அமைந்துள்ள வெரலபட வீதி வரை பிரயாணம் செய்யும் பொழுது வலது பக்கம் திரும்பி வெரலபட வீதியில் வலது பக்கம் திரும்ப 250 மீற்றர் த சேரம் வீதி வரை பிரயாணம் செய்யும் பொழுது இடது பக்கம் திரும்ப த சேரம் வீதியூடாக 300 மீற்றர் த அல்விஸ் ஒழுங்கை வரை சென்று, அந்த ஒழுங்கையில் 20 மீற்றர் செல்லும் பொழுது இல.07 என குறித்த காணியை அடைய முடியும்.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .-ஏலத்தின் முடிவில் ஆகக் கூடிய தொகையை கோருபவரினால் கீழே குறிப்பிடப்பட்டவாறு பணத்தை ஏல விற்பனையாளருக்கு செலுத்த வேண்டும் :-

(1) பெற்றுக் கொண்ட தொகையில் 10% ;
(2) பிரதேச சபை வரிக்காக 1 %;
(3) ஏலவிற்பனையாளரின் தொழில் ரீதியான கட்டணம் ;
(4) விற்பனை விதிகளை உறுதிப்படுத்தலுக்கான நொத் தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,000.00;
(6) சகல விளம்பர செலவுகளுக்கும்.

கொள்வனவு செய்த தொகையில் மிகுதி 90% விற்பனை செய்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்தப்பட வேண்டும். 30 நாட்களுக்குள் மிகுதித் தொகையை செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டதில் 10% இழப்பதோடு, ஆதனத்தை மீளவும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

குறிப்பிட்ட ஆவணங்களை பரிசோதனை செய்ய மற்றும் வேறு விபரங்களுக்கு

சிரேஷ்ட முகாமையாளர் (கடன்கள் மதிப்பீடு மற்றும் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 011- 2661866, 011-2661828 இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

பியரத்ன முத்துகுமாரன,
(முழுத்தீவுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 56, வண. மடிகே நாஹிமி மாவத்தை,
மஹரகம,
தொலைபேசி இல. : 0777-378441, 0714-424478.
தொலைநகல்: 0112- 509442.

3- 662

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் படி அசையும் ஆதனம்/இயந்திர உபகரணங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

ஹற்றன் நஷனல் பாங்க் பீஎல்சீ வத்தளை கிளை

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம்.பி.எம்.மொஹொட்டி அவர்களால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயின் பெயருக்கு

